தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**செய்யூரில் உப்பு உற்பத்தி பாதிப்பு**

First Published : 26 Apr 2011 09:17:56 AM IST

மதுராந்தகம், ஏப். 25: செய்யூர் உப்பளத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையால் உப்பு கரைந்து விடுவதால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

செய்யூரிலிருந்து கிழக்கு கடற்கரைச் சாலைக்கு செல்லும் வழியில் மத்திய, மாநில அரசுக்குச் சொந்தமான ஆயிரம் ஏக்கர் உப்பளம் நிலப்பகுதி உள்ளது.

இந்த உப்பளத்தில் ஒவ்வொரு ஆண்டும் தைமாத பிற்பகுதியில் உப்பு உற்பத்தி தொடங்கப்பட்டு தொடர்ந்து 6 மாதங்களுக்கு உப்பு உற்பத்தி செய்யப்படும்.

உப்பு உற்பத்தி தொடக்கத்திலேயே உப்பின் விலை குறைவாக விற்றதால் இந்த ஆண்டில் குறைந்த அளவு உற்பத்தியில் ஈடுபட்டனர்.தொடர்ந்து 2 மாதத்துக்கும் மேலாக உப்பு உற்பத்தி நடைபெற்று வந்த நிலையில், மழை பெய்ததால் செய்யூர் உப்பளப் பகுதியில் உப்பு பாத்திகளில் மழைநீரால் தேங்கியதால் உப்பு கரைந்தது.

மேலும் உற்பத்தியாளர்கள் இதுவரை உற்பத்தி செய்த உப்பை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்று பாதுகாத்து வருகின்றனர். தொடர்ந்து சில தினங்களுக்கு மழை தொடரும் என வானிலை நிலையம் அறிவித்து உள்ளதால் உப்பு உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

**பொள்ளாச்சியில் 110 மி.மீ. மழை**

First Published : 26 Apr 2011 04:49:50 AM IST

சென்னை, ஏப். 25: தமிழகம் முழுவதும் கடந்த ஓரிரு தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை அதிகபட்சமாக கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் 110 மி.மீ. மழை பதிவானது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

வளிமண்டலத்தின் மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள சுழற்சியே தற்போதைய மழைக்கு காரணம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பல பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமையும் மழை பெய்தது. திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மிக அதிகபட்சமாக கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் 110 மி.மீ. மழை பெய்தது.

கும்பகோணம், திருவையாறு ஆகிய பகுதிகளில் 90 மி.மீ, தஞ்சாவூர், முசிறி ஆகிய ஊர்களில் 80 மி.மீ. மழையும், துறையூரில் 70 மி.மீ. மழையும் பதிவானது.

இதேபோல் தாராபுரம், பாடலூர், தாத்தையங்கார்பேட்டை, மதுரை மாநகரம், சிவகங்கை ஆகிய பகுதிகளில் தலா 60 மி.மீ., புதுச்சேரி விமான நிலையம், ஒகேனக்கல், பாலக்கோடு, ஈரோடு, புள்ளம்பாடி, திருப்பத்தூர் ஆகிய ஊர்களில் தலா 50 மி.மீ., திருக்காட்டுப்பள்ளி, சீர்காழி, ராமேஸ்வரம், ஆம்பூர், இளையான்குடி, திருபுவனம், காரைக்குடி ஆகிய ஊர்களில் தலா 40 மி.மீ. என மழை பதிவானது.

வளிமண்டல மேல் அடுக்கில் ஏற்பட்ட சுழற்சி தொடர்வதால், மாநிலம் முழுவதும் செவ்வாய்க்கிழமையும் பரவலாக மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**கோடை மழை: தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 25 Apr 2011 12:08:59 PM IST

உதகை, ஏப். 24: நீலகிரி மாவட்டத்தில் பரவலாகப் பெய்த கோடை மழையால் தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதே நேரத்தில் மலைக் காய்கறி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து கோடை மழை பெய்து வருகிறது. கடந்த 4 நாள்களில் குன்னூர் பகுதியில் மட்டும் சுமார் 150 மி.மீ. மழை பதிவாகியுள்ளளது.

கேத்தி மற்றும் பர்லியார் சுற்றுப் பகுதிகளில் தலா 80 மி.மீ., நிலச்சரிவு அபாயமுள்ள பர்லியார் மற்றும் ஹில்குரோவ் பகுதிகளில் தலா 100 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டில்தான் அதிக அளவில் கோடை மழை பெய்துள்ளதாக உபாசி அறிவியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக கொட்டிய உறைபனியின் காரணமாக வறண்டு காணப்பட்ட தேயிலைச் செடிகள், கோடை மழையால் தற்போது செழித்து வளரத் தொடங்கியுள்ளன. இதன் மூலம் சாகுபடி அதிகரித்து, தேயிலை உற்பத்தி பெருகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், தொடர்ந்து பெய்யும் மழையால் மண்ணின் ஈரப்பதம் அதிகரித்து, உருளைக்கிழங்கு, கேரட், முட்டைக்கோஸ் போன்ற பயிர்கள் அழுகும் நிலைக்கு உள்ளாகியுள்ளன. எனவே, சாகுபடி பரப்பில் 50 சதத்துக்கும் அதிகமாக மழையால் பாதிக்கப்பட்டுள்ள காய்கறித் தோட்டங்கள் குறித்து ஆய்வு நடத்தி, விவரங்களைத் தெரிவிக்க வேண்டுமென அந்தந்த

தோட்டக்கலைத் துறை அலுவலகங்களுக்கு மாவட்ட தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் அலுவலகம் உத்தரவிட்டுள்ளது. மாவட்டத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களில் ஒரு பிரிவினருக்கு மகிழ்ச்சியையும், மற்றொரு பிரிவினருக்கு வருத்தத்தையும் இந்த கோடை மழை ஏற்படுத்தியுள்ளது.

**மேட்டூர் அணையை ஜூன் 12-ல் திறக்க வாய்ப்பு**

First Published : 25 Apr 2011 03:12:27 PM IST

தஞ்சாவூர், ஏப். 24: நிகழாண்டு காவிரி டெல்டா பாசனத்திற்காக, ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணையைத் திறக்க வாய்ப்பு அதிகம் உள்ளதாக பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படுவது வழக்கம். கடந்த ஆண்டு இதே நேரத்தில் மேட்டூர் அணையில் 65 அடி அளவிற்குதான் தண்ணீர் இருந்தது.

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் போதுமான மழை பெய்யாததால், ஜூன் 12-ம் தேதி பாசனத்திற்காக மேட்டூர் அணை திறக்கப்படவில்லை.

ஆனால், நிகழாண்டில் மேட்டூர் அணையில் நீர் இருப்பு 108 அடி இருப்பதாலும், ஞாயிற்றுக்கிழமை நீர்வரத்து 16,400 கன அடியாக அதிகரித்திருப்பதாலும், வழக்கமான நாளான ஜூன் 12-ம் தேதி அணையைத் திறக்க வாய்ப்புள்ளது என்று பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

மே மாத இறுதியில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கூடுதலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதால், ஜூன் 12-ம் தேதிக்குள் அணையின் மொத்தக் கொள்ளளவான 120 அடியை எட்டுவதற்கும் வாய்ப்பு உள்ளதாக நம்பப்படுகிறது.

கடந்த ஆண்டு ஜூனில் மேட்டூர் அணை திறக்கப்படாததால், காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி முழுவேகத்தில் நடைபெறவில்லை. நிகழாண்டில் அணையின் நீர் இருப்பு திருப்தி அளிப்பதால், விவசாயிகள் நம்பிக்கையோடு குறுவை சாகுபடிப் பணிகளை முன்னதாகவே மேற்கொள்ளத் தொடங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

First Published : 25 Apr 2011 10:37:52 AM IST

மேட்டூர், ஏப். 24: காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 16,400 கன அடியாக அதிகரித்துள்ளது.

÷கடந்த ஒரு வாரமாக மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் காவிரியின் துணை நதிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் கோடை மழை பெய்து வருகிறது. இதனால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து வருகிறது. ÷ ஒரே நாளில் நீர்மட்டம் 0.71 அடி உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

÷இந்நிலையில், குடிநீர்த் தேவைக்காகத் திறக்கப்பட்டு வந்த நீரின் அளவு வினாடிக்கு 800 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

**ஜப்பானிய காடை வளர்க்க ஏப். 27-ல் இலவச பயிற்சி**

First Published : 25 Apr 2011 02:45:22 PM IST

கரூர், ஏப். 24: இறைச்சிக்கான ஜப்பானிய காடை வளர்ப்பு குறித்து ஏப்.27-ல் இலவச பயிற்சியளிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து கரூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் க. செந்தில்வேல் வெளியிட்ட செய்தி குறிப்பு:

கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் ஏப்.27 (புதன்கிழமை) இறைச்சிக்கான ஜப்பானிய காடை வளர்ப்புக்கான ஒரு நாள் இலவச பயிற்சி நடைபெறுகிறது.

இதில் காடை வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய்கள், அவற்றைத் தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள், பண்ணைப் பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் புதன்கிழமை காலை 10 மணிக்கு பயிற்சி மைய வளாகத்திற்கு வந்து விட வேண்டும். விருப்பமுள்ளோர் 04324-294335 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, முன்பதிவு செய்து கொள்ளலாம்.

**நெல் விளைச்சலில் பாதிப்பு**

First Published : 25 Apr 2011 02:22:04 PM IST

காரியாபட்டி, ஏப். 24: காரியாபட்டி பகுதியில் கம்பிக்குடி, முடுக்கங்குளம், அல்லாளப்பேரி கண்மாய்கள் நீரை நம்பி, விவசாயிகள் 500 ஏக்கரில் டீலக்ஸ் பொன்னி, ஐ.ஆர். 20 ரக நெல்களைப் பயிரிட்டனர். கதிர் பிடிக்கும் தறுவாயில், இப்போது நீர் பற்றாக்குறையால் விவசாயிகள் கவலையடைந்தனர். மழையை எதிர்பார்த்துக் காத்திருந்த விவசாயிகள் பயிர்கள் வாடுவதைக் கண்டு அறுவடை செய்தனர். போதிய தண்ணீரின்றி நெல் பயிர்கள் முழுமையாக விளைச்சல் பெறாமல் அறுவடை செய்ததால், மகசூல் பெருமளவு குறைந்தது.

**வெள்ளரிக்காய் விளைச்சல் அமோகம்; விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 25 Apr 2011 03:12:48 PM IST

புதுக்கோட்டை, ஏப். 24: புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் பகுதியில் நிகழாண்டு எதிர்பார்த்ததைவிட அமோகமாக வெள்ளரிக்காய் விளைந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திருமயம் ஒன்றியத்துக்குள்பட்ட மணவாளன்கறை, கரையான்பட்டி, ஏனப்பட்டி, அரசம்பட்டி, வேப்பம்பட்டி, வெள்ளுக்குடிபட்டி, மெய்யபட்டி, ஒசுவான்பட்டி, நமணசமுத்திரம், தேமுத்தபட்டி, கீழதேமுத்தபட்டி உள்ளிட்ட 30-க்கும் அதிகமான கிராமங்களில் வெள்ளரி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

வெள்ளரியை விளைவிக்க குறைந்த அளவு தண்ணீரே போதும் என்பதாலும், இதற்கான உற்பத்திச் செலவும் குறைவு என்பதாலும் இதைச் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

இப்போது நிலவும் கடும் வெப்பத்தைத் தணிக்க மிகவும் குறைந்த செலவில் கிடைக்கும் இயற்கை காரணியாக வெள்ளரிக்காய் திகழ்வதால், உள்ளூர் சந்தையில் கணிசமாக விற்பனை செய்ய முடிவதாலும், வெளி மாவட்டங்களில் இருந்து வெள்ளரியை கொள்முதல் செய்ய வியாபாரிகள் அதிக அளவில் வருவதாலும் திருமயம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது:

வெள்ளரிக்கு அதிகத் தேவை ஏற்பட்டுள்ளதால் உள்ளூரிலும், வெளி மாவட்டங்களிலும் நல்ல லாபத்துக்கு வெள்ளரியை விற்பனை செய்ய முடிகிறது.

இதை வாங்கிச் செல்லும் வியாபாரிகளும் தங்களுக்கு கட்டுப்படியான லாபம் கிடைப்பதாகக் கூறுகின்றனர்.

திருமயம் வட்டத்தைச் சேர்ந்த நமணசமுத்திரம் போன்ற பகுதிகளில் சாகுபடியாகும் வெள்ளரிக்காய்களை நூற்றுக்கணக்கான பெண்கள் கொள்முதல் செய்து, கூடைகளில் நிரப்பி புதுக்கோட்டை, திருமயம், கடியாபட்டி, ராயவரம் போன்ற பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

இதன்மூலம் கிராமப்புறத்தில் உள்ள ஏழைப் பெண்களின் குடும்பப் பொருளாதாரம் மேம்பாடு அடைகிறது. இங்கிருந்து சென்னை, கோவை, விழுப்புரம், விருத்தாசலம், திருச்சி, மதுரை போன்ற நகரங்களுக்கும் வெள்ளரிக்காய் மொத்தமாக அனுப்பிவைக்கப்படுகிறது.

கடந்த ஆண்டைவிட நிகழாண்டில் வெள்ளரி சாகுபடி அதிகரித்திருப்பது குறித்து விவசாயி கோட்டூர் ஆர். ராமச்சந்திரன் கூறியது:

திருமயம் பகுதியில் சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும். அறுவடைக்குப் பிறகு கண்மாய்களில் நீராதாரம் இருந்தால், பயறு வகைகள், நிலக்கடலை உள்ளிட்ட தானியங்களைத்தான் பெரும்பாலான விவசாயிகள் சாகுபடி செய்வர்.

அவை நன்றாக விளையும்போது, நீர் ஆதாரம் இல்லாமல் போனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் நிலை உருவாகும். ஆனால், குறைந்த அளவிலான நீர்த் தேவை, குறைந்த சாகுபடிச் செலவு ஆகியவை காரணமாக இந்தப் பகுதி விவசாயிகள் வெள்ளரி சாகுபடியை மேற்கொள்கின்றனர்.

மேலும், ஏக்கருக்கு சுமார் ஒரு டன் வரை வெள்ளரியில் மகசூல் கிடைக்கும். கடந்த ஆண்டு இந்தப் பகுதியில் சுமார் 100 ஏக்கரில் வெள்ளரி சாகுபடி செய்யப்பட்டது.

நிகழாண்டில் இது இரு மடங்காக அதிகரித்துள்ளது. மேலும், இப்போது ஏக்கருக்கு 1.5 டன் வரை மகசூல் கிடைத்துள்ளது. இதற்கு நிலத்தடி நீரும், அவ்வப்போது பெய்த மழையுமே காரணம் என்றார் அவர்.

தினமலர்

**சர்க்கரை உற்பத்தி 24 சதவீதம் அதிகரிப்பு**
ஏப்ரல் 26,2011,00:07



புதுடில்லி: நடப்பு 2010-11ம் சர்க்கரை பருவத்தில் (அக்டோபர் முதல் செப்டம்பர் வரை), பிப்ரவரி 15ம் தேதி வரையிலுமாக, நாட்டின் சர்க்கரை உற்பத்தி, சென்ற ஆண்டின் இதே காலத்தை விட 24 சதவீதம் அதிகரித்து, 2.18 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.சென்ற ஆண்டின், இதே காலத்தில், சர்க்கரை உற்பத்தி 1.76 கோடி டன்னாக இருந்தது என, இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில், அதிகளவில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படும் மகாராஷ்டிரா மாநிலத்தில், தற்போது கரும்பு அரவை முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேபோன்று, கரும்பு உற்பத்தியில், இரண்டாம் இடத்தில் உள்ள உத்தர பிரதேச மாநிலத்திலும் சர்க்கரை உற்பத்தி அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என, இச்சங்கத்தின் தலைமை இயக்குனர் அபினாஷ் வர்மா குறிப்பிட்டார்.கடந்த 2009-10ம் பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி 1.90 கோடி டன்னாக இருந்தது.

இது, நடப்பு பருவத்தில் 2.50 கோடி டன்னாக அதிகரிக்கும் என இச்சங்கம் தெரிவித்துள்ளது. அதேசமயம், மத்திய அரசு, நடப்பாண்டில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2.45 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது. இதில், உள்நாட்டிற்கான தேவை 2.20 கோடி டன் என்ற அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.தேவையை விட, உற்பத்தி அதிகரிக்கும் என்ற நிலைப்பாட்டால், மத்திய அரசு, அண்மையில், பொது உரிமத்தின் கீழ், 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதில், 51 ஆயிரத்து 500 டன் சர்க்கரையை அண்டை நாடுகளுக்கு, ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதிக்க வேண்டும். இதுகுறித்து அரசு,தெளிவான அறிக்கையை வெளியிட வேண்டும் என இச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.உள்நாட்டில், சர்க்கரை உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டால், டில்லியில், ஒரு கிலோ சர்க்கரையின் விலை தற்போது, 30-32 ரூபாய் என்ற அளவில் குறைந்துள்ளது.

அதேசமயம், கடந்த 2010ம் ஆண்டு ஜனவரி மாதத்தில், இதன் விலை 50 ரூபாய் என்ற விலையில் மிகவும் அதிகரித்து காணப்பட்டது.

**ஜான் டியர் இந்தியா புதிய டிராக்டர் அறிமுகம்**
ஏப்ரல் 26,2011,00:04



**ஜான் டியர் இந்தியா புதிய டிராக்டர் அறிமுகம்**

சென்னை: அமெரிக்காவை சேர்ந்த ஜான் டியர் குழுமத்தின் துணை நிறுவனமான ஜான் டியர் இந்தியா, 60 குதிரைத் திறன் கொண்ட அதிநவீன 'ஸ்மார்ட்' 5060 ஈ என்ற டிராக்டரை அறிமுகப்படுத்தியுள்ளது.

சர்வதேச தரத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த டிராக்டர், 3 சிலிண்டர் டீசல் இன்ஜினில் இயங்கக் கூடியது. ஓட்டுனரின் வசதிகேற்ப,சாய்த்துக் கொள்ளும் வகையில் பவர் ஸ்டியரிங் தொழில்நுட்பம் கொண்ட இந்த டிராக்டரில், தானாக சமன்படுத்திக் கொள்ளும் வகையில் எண்ணெய் @தாய்ந்த டிஸ்க் பிரேக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. @மலும் இதில், செல்@பானைசார்ஜ் செய்யும் வசதி, வாகனம் @பாகும் @வகம், எரிபொருள் அளவு, பராமரிப்பு சேவையை நினைவூட்டுதல் உள்ளிட்ட 5 முக்கிய அம்Œங்களை அறிவிக்கும் எல்.சி.டி திரை உள்ளது.இதுகுறித்து ஜான் டியர் இந்தியா நிறுவனத்தின் விற்பனை மற்றும்சந்தைப்படுத்துதல் பிரிவு இயக்குனர் ரவி@மனன் கூறியதாவது:இந்திய விவŒõயிகளின் @தவையை அறிந்து அதற்கேற்ப சமம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தில் ஜான் டியர் நிறுவனம், டிராக்டர்களை தயாரித்து வருகிறது. கடந்த ஆண்டில்

35 ஆயிரம் டிராக்டர் களை விற்பனை செய்துள்ளது. தற்@பாது அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 'ஸ்மார்ட்' டிராக்டர், அதிநவீன வŒதிகளுடன் எரிபொருள் சிக்கனத்தைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ரவி@மனன் கூறினார்.இந்த டிராக்டரின் விலை 6.90 லட்சம் ரூபாயிலிருந்து தொடங்குகிறது.

**அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பரிதவிப்பு : கோடை மழையால் நெற்பயிர்கள் சேதம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 26,2011,00:35 IST

கடலூர் : மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பெய்து வரும் கோடை மழை காரணமாக 1,000 ஏக்கரில் அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் வயலில் தண்ணீர் சூழ்ந்துள்ளதால் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர்.

தமிழகத்தில் கடந்த மார்ச் மாதம் முதலே வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்தது. இந்நிலையில் வளிமண்டல மேலடுக்கில் ஏற்பட்ட சுழற்சி காரணமாக தமிழகத்தில் பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. கடலூர் மாவட்டத்தில் கடந்த 20ம் தேதி சிதம்பரத்தில் இரண்டு மணி நேரம் கன மழையும், வேறு சில பகுதிகளில் லேசான மழை பெய்தது. இதன் காரணமாக மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் மேலும் அதிகரித்த நிலையில் கடந்த 22ம் தேதி இரவு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.

இதில் அதிகபட்சமாக லக்கூரில் 140 மி.மீ., மழை பெய்தது. திட்டக்குடி மற்றும் தொழுதூர் பகுதியில் பெய்த கனமழை காரணமாக வெள்ளாற்றிலும், விழுப்புரம் மாவட்டம் கல்வராயன் மலை பகுதியில் பெய்த கனமழை காரணமாக விருத்தாசலம் மணிமுக்தா ஆற்றிலும் தண்ணீர் பெருக்கெடுத்துள்ளது.

இந்நிலையில் கடந்த 23ம் தேதியும் கோடை மழை நீடித்தது. அதிகபட்சமாக தொழுதூரில் 105 மி.மீ., மழை பெய்தது. அதேபோன்று நேற்று முன்தினமும் மாவட்டத்தின் பல பகுதிகளில் கோடை மழை கொட்டியது. அதிகபட்சமாக குப்பநத்தத்தில் 105.80 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் சராசரியாக 24 மி.மீ., மழை பெய்துள்ளது. கோடை மழை மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திய போதிலும், குறுவை நெல் பயிரிட்ட விவசாயிகள் கோடை மழையினால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

கடலூர் அடுத்த பூண்டியாங்குப்பம், ஆலப்பாக்கம், பூவாணிக்குப்பம், தானூர், சம்பாரெட்டிப்பாளையம், பள்ளிஓடை, தீர்த்தனகிரி, கம்பிளிமேடு, ராமநாதன்குப்பம் மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் உள்ள ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களில் கடந்த ஜனவரி மாதம் குறுவை சாகுபடியாக சின்னபொன்னி நடவு செய்தனர். இப்பகுதி நிலங்கள் பெரும்பாலும் குண்டியமல்லூரில் உள்ள பெருமாள் ஏரி மூலம் பாசன வசதி பெற்று வருகின்றன.

கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதம் பெய்த வடகிழக்கு பருவ மழை காரணமாக பெருமாள்

ஏரியில் போதிய அளவில் தண்ணீர் இருப்பு வைக்கப்பட்டதால், குறுவை சாகுபடி பயிர்கள் செழித்து வளர்ந்து கதிர்பிடித்தன. நெற்கதிர்கள் முற்றி அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் இப்பகுதியில் கடந்த நான்கு நாட்களாக பெய்து வரும் கோடை மழை காரணமாக நெல் வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. மழை காரணமாக நெற்கதிர்கள் நிலத்தில் சாய்ந்துள்ளன. இதனால் இயந்திரங்களை பயன்படுத்தி அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அறுவடை செய்யவில்லை என்றால் நெற்கதிர்கள் முளைப்பு விட்டு விடும் என்பதால் இப்பகுதி விவசாயிகள் செய்வதறியாமல் பரிதவித்து வருகின்றனர்.
நெற்கதிர்கள் மழையில் சேதமடைந்துள்ளதால் நெல்லை வாங்க வியாபாரிகள் எவரும் முன்வரவில்லை. இதனால் அரும்பாடுபட்டு நெல்லை அறுவடை செய்தாலும் அதனை விற்க 15 கி.மீ., தூரத்தில் உள்ள கடலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. போதிய விலை கிடைக்காத நிலை உள்ளதால் விவசாயிகள் பெரும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

**இருபது ஆண்டுகளாக வெள்ளரி சாகுபடி லாபம் ஈட்டி சாதனை படைத்த விவசாயி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 26,2011,03:32 IST

திண்டிவனம் : கிராமப்புற விவசாயி ஒருவர் இருபது ஆண்டுகளாக வெள்ளரி சாகுபடி செய்து தொடர்ந்து லாபம் ஈட்டி சாதனை படைத்து வருகிறார்.
விழுப்புரம் மாவட்டத்தில் பருவநிலை காரணமாக வெள்ளரி பயிரிடுவோர் பெரும்பாலும் தை மாதம் இரண்டாவது வாரத்தில் 15 நாட்கள் பின்பட்டத்தில் விதைப்பு செய்தனர். இதனால் மாவட்டம் முழுவதும் பெரும்பாலான இடங்களில் கடந்த வாரத்தில்தான் வெள்ளரி அறுவடை துவங்கியது.
திண்டிவனம் பகுதியில் தற்போது வெள்ளரிப்பழங்கள் விற்பனை சூடுபிடிக்கத் துவங்கியுள்ளது. விக்கிரவாண்டி அடுத்த மண்டபம் கிராமத்தில் வெள்ளரி பயிரிட்டுள்ள விவசாயி நாகமுத்து (45) கூறியதாவது:
எனது சொந்த நிலத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து வெள்ளரி பயிர் செய்து வருகிறேன். இதில் எனக்கு நல்ல அனுபவம் கிடைத்தது. பல இடங்களில் அறுவை செய்யப்படும் வெள்ளரி பழங்கள் 3 கிலோ முதல் அதிகபட்சம் 7,8 கிலோ எடைகொண்டதாக இருக்கும். எனது நிலத்தில் குறைந்தது 3 கிலோ முதல் அதிகபட்சம் 12, 13 கிலோ வரை எடையுள்ள பெரிய பழங்களை அறுவடை செய்து வருகிறேன். இதற்கு தேவையான அளவு இயற்கை உரமாகிய மக்கிய குப்பையை அதிகம் பயன்படுத்துகிறேன். விதைப்பின்போதும், 15ம் நாள், 30ம் நாள் மற்றும் 60ம் நாளில் ஏக்கருக்கு 5 மூட்டை டி.ஏ.பி., உரமிடுகிறேன். இதனால் நல்ல பலன் கிடைக்கிறது.

சிறு வியாபாரிகள் தோட்டத்திற்கே வந்து பழங்களை வாங்கிச் செல்கின்றனர். மண்டபம் கும்பகோணம் சாலையில் உள்ள நிலத்தின் அருகில் வைத்துள்ள கடையில் கிலோ 15 ரூபாய்க்கு விற்பனை செய்கிறேன். கார் மற்றும் பிற வாகனங்களில் வருபவர்கள் அதிகளவில் விரும்பி வாங்கி செல்கின்றனர். மொத்த விலைக்கு கிலோ 10 ரூபாய் வீதம் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு பழங்களை ஏற்றுமதி செய்கிறேன். இவ்வாறு விவசாயி நாகமுத்து கூறினார்.

**மீன்வளர்ப்புக்கு குத்தகை எடுத்தவர்கள் கலக்கம் : கிராமப்புற ஏரிகளில் நீர்மட்டம் உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 26,2011,01:54 IST

தியாகதுருகம் : தொடர்மழை காரணமாக தியாகதுருகம் பகுதியில் ஏரி, குளங்களில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் மீன் வளர்ப்புக்கு குத்தகை எடுத்தவர்கள் கலக்கமடைந்துள்ளனர்.
வளிமண்டல மேல் அடுக்கில் ஏற்பட்ட காற்று சுழற்சி காரணமாக கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் தியாகதுருகம் பகுதியில் கனமழை பெய்து வருகிறது. இதனால் தெருக்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஏரி, குளங்களுக்கு நீர் வரத்து அதிகமானதால் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. கோடைவெயில் வாட்டி எடுத்து வரும் நிலையில் தற் போதைய திடீர் மழை மக்களுக்கு வெப்பத்தில் இருந்து தற்காலிக விடுதலையை கொடுத்துள்ளது.
கோமுகி, மணிமுக்தா நதிகளில் நீரோட்டம் அதிகரித்தது. இதனால் இப்பகுதியில் உள்ள கிணற்றில் நீர்மட்டம் உயர்ந்து விவசாயத்திற்கு போதிய தண்ணீர் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது. இப்படி கோடை மழையால் பலரும் நிம்மதியடைந்துள்ள நிலையில், கிராமப்புற ஏரி, குளங்களில் மீன்வளர்ப்புக்கு குத்தகை எடுத்தவர்கள் கவலையடைந்துள்ளனர்.
பருவமழை காலத்தில் கிராமங்களில் உள்ள ஏரி, குளங்கள் நிரம்பும்போது ஊராட்சிகளுக்கு வருவாய் ஈட்டும் நோக்கில் மீன்வளர்ப்புக்கு குத்தகை விடுவது வழக்கம். அவ்வாறு கடந்த டிசம்பர் மாதம் தியாகதுருகம் பகுதியில் ஏரி, குளங்கள் நிரம்பியதால் பெரும்பாலானவைகளில் மீன்வளர்ப்புக்கு தனியார்களிடம் குத்தகை விடப்பட்டது.
அவர்களும் உயர்ரக மீன் குஞ்சுகளை வாங்கிவந்து நீர்நிலைகளில் விட்டு வளர்த்து வந்தனர். தற்போது கோடை காலம் என்பதால் ஏரிகளில் நீர் குறைந்து மீன்பிடிப்பதற்கு ஏற்ற சூழல் நிலவியது. அதே வேளையில் கடலில் மீன்பிடிக்க 45 நாட்கள் தடை விதிக்கப்பட்டுள்ளதால் ஏரி மீன்களுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு உருவாகியது. இதனால் ஏரிகளில் மீன் வளர்த்து வருபவர்கள் மகிழ்ச்சியில் இருந்தனர்.
இந்நிலையில் கடந்த சிலநாட்களாக பெய்த கனமழை காரணமாக ஏரி, குளங்களில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் வளர்ச்சியடைந்த மீன்களை பிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதிலும் விலைஉயர்ந்த முதல் ரக மீன்களான விரால், கட்லா ஆகியவைகள் நீர்மட்டம்

குறையும்போதுதான் வலைகளில் பிடிபடும்.
கோடை வெயிலால் ஏரிகளில் நீர்மட்டம் குறைந்து வந்ததால் அதிகளவில் மீன் பிடிபடும் என்று எதிர்பார்த்து இருந்த வேளையில் மழை பெய்துள்ளதால், குத்தகை எடுத்தவர்கள் கவலையடைந்துள்ளனர். மீண்டும் நீர்வடிவதற்குள் தென்மேற்கு பருவமழை துவங்கி தொடர்ந்து நீர் குறையாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனால் மீன் வளர்ப்புக்காக முதலீடு செய்து லாபத்தை எதிர்நோக்கி காத்திருந்த பலரும் லாபம் ஈட்டமுடியுமா என்ற கலக்கத்தில் உள்ளனர்.

**கால்நடைகளுக்கு நோய் தாக்குதலை தடுக்க சிறப்பு முகாம் நடத்த முடிவு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 26,2011,00:26 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி சரகத்தில், சீதோஷ்ண நிலை மாற்றத்திற்கேற்ப கால்நடைகளுக்கு நோய் தாக்குதல் ஏற்படுவதை தவிர்க்க சிறப்பு முகாம் மூலம் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.பொள்ளாச்சி சரக கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் கூறியதாவது:பொள்ளாச்சி தாலுகாவிற்குட்பட்டு கிராமங்கள் அதிகளவில் உள்ளன. இந்த கிராமங்களிலுள்ள ஆடு, மாடு, கோழி ஆகிய கால்நடைகளுக்கு சீதோஷ்ண நிலை மாற்றத்தினால், கோமாரி நோய் உட்பட பல்வேறு நோய் தாக்குதலுக்கு உள்ளாகும். இதை தவிர்க்கும் வகையில், கிராமங்களில் 53 முகாம் நடத்தப்பட்டுள்ளது. இந்த முகாம் மூலம் 83 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதுதவிர, அவ்வபோது கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முகாம் நடத்தி அனைத்து கால்நடைகளும் பரிசோதிக்கப்படுகிறது.
விவசாயிகள் கால்நடைகளுக்கு ஏதேனும் நோய் தாக்குதல் இருப்பதாக அறிகுறி தெரிந்தால் உடனடியாக கால்நடை மருத்துவரை அணுகி தீர்வு பெறலாம், என்றனர்.

**மாம்பழ சீசன் வந்தாச்சு தூத்துக்குடிக்கு வரத்து அதிகம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 26,2011,01:58 IST

தூத்துக்குடி : தூத்துக்குடியில் மாம்பழம் விற்பனை களைகட்டத் துவங்கியுள்ளது. இதனையடுத்து மார்க்கெட்டுக்கு மாம்பழங்களின் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. முக்கனிகளில் முதல் கனி மாம்பழம். மாம்பழத்திற்கு எப்பவுமே மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும். பொதுவாக ஏப்ரல்,மே மாதங்களில் மாம்பழத்தின் விளைச்சல் அதிகளவில் இருக்கும். இதனால் ஏப்ரல்,மே மாதம் மாம்பழ சீசன் என்பார்கள். இந்நிலையில் தூத்துக்குடி மார்க்கெட்டிற்கு இம்மாத தொடக்கத்தில் மாம்பழ வரத்து மிக குறைவாக இருந்தது. இதனால் மாம்பழ விற்பனை மிகவும் டல் அடித்தது.மேலும் கிலோ 80 ரூபாய் வரை விற்கப்பட்டது. ஆனால் கடந்த 2 நாட்களாக

தூத்துக்குடி மார்க்கெட்டிற்கு மாம்பழங்களின் வரத்து அதிகமாகியுள்ளது. இதனால் உச்சத்தில் இருந்த மாம்பழங்களின் விலை குறையத் துவங்கியுள்ளது. தூத்துக்குடிக்கு சேலம், ஏற்காடு, செங்கோட்டை, தென்காசி, புளியரை மற்றும் கேரளாவில் புனலூர், அஞ்சல் உள்ளிட்ட இடங்களில் இருந்து மாம்பழங்கள் இறக்குமதி செய்யப்படுகிறது. அடுத்து வரும் நாட்களில் அதிகளவில் மாம்பழங்கள் இறக்குமதி செய்ய வியாபாரிகள் முடிவு செய்துள்ளனர். இதனால் மாம்பழங்களின் விலை இன்னும் குறையக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மாம்பழ பிரியர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**செண்டு மல்லிக்கு விலையில்லாததால் செடியிலேயே பறிக்காமல் விடும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2011,21:48 IST

திண்டுக்கல் : திண்டுக்கல் அருகேயுள்ள கல்லுப்பட்டியில் விலையில்லாததால், செடியிலேயே செண்டுமல்லி பறிக்காமல் விடப்பட்டுள்ளது.
திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை, செம்பட்டி, சில்லுக்குவார்பட்டி, சாணார்பட்டி பகுதியில் அதிகாரிபட்டி, கம்பிளியம்பட்டி, ராஜாக்காபட்டி, கல்லுப்பட்டி ஆகிய இடங்களில் செண்டுமல்லி பயிரிடப்படுகிறது. பயிரிட்ட 3 மாதத்திலேயே பூக்கள் வரத்துவங்கி விடும். தனியாக சீசன் எதுவும் கிடையாது. இந்தாண்டு செண்டுமல்லி விளைச்சல் அதிகமாகியுள்ளது. பூமார்க்கெட்டில் கிலோ ரூ.4 முதல் ரூ.5க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால், செண்டு மல்லி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
விவசாயி பஞ்சவர்ணம் கூறியதாவது: செண்டு மல்லி இந்தாண்டு நல்ல விளைச்சல் கண்டுள்ளது. இதனால் விலையில் கடுமையான சரிவு ஏற்பட்டுள்ளது. பூக்களுக்கு களை எடுத்து, பூச்சி மருந்து அடித்து வளர்க்க வேண்டியுள்ளது.கடன் வாங்கி பயிரிட்ட பணம் கூட கிடைக்கவில்லை. கடும் நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் பல நாட்கள் பறிக்காமல் பூக்களை செடியிலேயே விட்டு விடுகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**கரும்பு, கடலைக்கு ஏற்ற கோடை மழை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2011,23:03 IST

சிவகங்கை : தற்போதைய கோடை மழை கரும்பு, நிலக்கடலை விளைச்சலுக்கு கைகொடுக்கும் என, எதிர்பார்ப்பு நிலவுகிறது.
மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக கன மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை 8.30

முதல் நேற்று காலை 8.30 மணி வரை, சிவகங்கையில் 59.2; மானாமதுரையில் 19.6; திருப்புவனத்தில் 42; இளையான்குடியில் 38; தேவகோட்டையில் 15.4; காரைக்குடியில் 39; திருப்புத்தூரில் 46.3 மி.மீ., மழை பதிவானது. மாவட்டத்தின் சராசரி 37 மி.மீ., சிவகங்கையில் அதிகபட்சமாக 59.2 மி.மீ., பதிவானது.
கோடை மழையால், மாவட்டத்தில் 5,000 எக்டேரில் நடவு செய்துள்ள கரும்பு; 1,000 எக்டேரில் நிலக்கடலை பயிருக்கு கை கொடுக்கும். பாசனத்திற்கு ஏற்ற மழையாக இல்லாவிட்டாலும், கால்நடைகளின் தாகத்தை தீர்க்கும் வகையில் கண்மாய்களில் நீர் தேங்கியுள்ளது.
கோடை உழவு: தற்போதைய மழையை நம்பி, விவசாயிகள் கோடை உழவு பணிகளை மேற்கொள்ளலாம். இந்த மழை நீரை பயன்படுத்தி உளுந்து, பாசிப்பருப்பு, எள், பயறு வகைகளை நடவு செய்யலாம் என, விவசாய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *நடப்பு நிதி ஆண்டில் பொருளாதாரத்தில் 9% வளர்ச்சி ஏற்படும்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் பொருளாதாரத்தில் 9 சதவீதம் வளர்ச்சி ஏற்படும் என மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்களுக்கான செயலாளர் ஆர். கோபாலன் தெரிவித்தார். அதேசமயம், இந்த வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், சர்வதேச சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை மிகவும் உயராமல் இருக்க வேண்டும் என தெரிவித்தார்.*
*மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் மீண்டும் கலவரம் அதிகரித்ததையடுத்து, திங்கள்கிழமை அன்று ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 124 டாலராக உயர்ந்தது. ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 10 டாலர் உயரும்போது, இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் 0.3–0.5 சதவீத அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று பங்கு வர்த்தக தரகு நிறுவனமான சி.எல்.எஸ்.ஏ. மதிப்பீடு செய்துள்ளது.*
*நாட்டின் பொருளாதாரத்தில், சென்ற நிதி ஆண்டில் 8.75 சதவீதமும், நடப்பு நிதி ஆண்டில் 9.25 சதவீதமும் வளர்ச்சி ஏற்படும் என சென்ற பிப்ரவரி மாதத்தில் மத்திய அரசு மதிப்பீடு செய்தது. இந்நிலையில், பணவீக்கம் அதிகரிப்பு, கச்சா எண்ணெய் விலை உயர்வு போன்றவை பொருளாதார வளர்ச்சிக்கு சவாலாக அமைந்துள்ளன.*

## கோடை மழை வெள்ளத்தால் தண்ணீர் வரத்து அதிகரிப்பு மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்தது




சென்னை, ஏப்.26–

கோடை மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததைத்தொடர்ந்து நேற்று ஒரே நாளில் மட்டும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 2 அடியாக உயர்ந்தது. மேலும் தண்ணீர் வரத்து அதிகமாக இருப்பதால் இந்த ஆண்டு டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணை ஜூன் மாதம் வழக்கமான தேதியிலேயே திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோடை மழை நீடிக்கிறது

கன்னியாகுமரி கடல் பகுதியில் வளி மண்டலத்தின் மேல் அடுக்கில் ஏற்பட்ட சுழற்சி காரணமாக தமிழகம் முழுவதும் கோடை மழை கடந்த சில நாட்களாக நீடித்து வருகிறது.

மதுரை மாவட்டத்தில் கடந்த 20–ந்தேதி முதல் 21, 22 ஆகிய 3 நாட்கள் பெய்த மழை 23–ந்தேதி மட்டும் பெய்யவில்லை. ஆனால் 3 நாட்களாக பெய்த மழையால் மதுரையில் ஆங்காங்கே மழை நீர் தேங்கி கிடக்கிறது. இதன்காரணமாக சுட்டெரித்த கோடை வெப்பத்தின் அளவை மழை தணித்தது.

மதுரையில் நள்ளிரவில் மழை

மதுரையில் நேற்று முன்தினம் இரவு 11.15 மணிக்கு காற்று இல்லாமல் இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது. சுமார் 2½ மணி நேரம் நீடித்த இந்த மழை மதுரைநகர் மற்றும் மேலூர், கள்ளந்திரி, அழகர்கோவில், திருப்பரங்குன்றம் உள்பட மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் மழை கொட்டி தீர்த்தது.

மதுரை மாவட்டத்திலேயே மதுரை நகரில் தான் அதிக அளவாக 56 மில்லி மீட்டர் மழை பதிவானது.

காவிரி டெல்டா பகுதியில்

தஞ்சாவூர், திருவாரூர், நாகை ஆகிய காவிரி டெல்டா மாவட்டங்களில் நேற்று முன்தினம் இரவு தொடங்கி பரவலாக அழை பெய்தது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிக அளவாக திருவாரூர் மாவட்டம்

நீடாமங்கலம் அருகில் உள்ள கோரையாறு தலைப்பு பகுதியில் 121 மி.மீ (12.செ.மீ.)மழை பதிவானது.

இதுதவிர வலங்கைமான், அணைக்கரை, தஞ்சாவூர், நெய்வாசல், சீர்காழி, பாபநாசம், ஒரத்தநாடு, வேதாரண்யம், நன்னிலம், குடவாசல், பட்டுக்கோட்டை, மன்னார்குடி, பேராவூரணி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், திருத்துறைப்பூண்டி உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்தது.

மின்சாரம் பாய்ந்து ஒருவர் பலி

காரைக்குடி பகுதியில் நேற்று முன்தினம் இரவு காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால் ரோட்டில் மழை தண்ணீர் தேங்கி கிடந்தது. இந்த மழையை பொருட்படுத்தாமல் நேற்று காலையில் பால் பாக்கெட் விற்பனை செய்ய சென்ற டீக்கடைக்காரர் மாணிக்கம்(வயது42) என்பவர் ரோட்டில் அறுந்து கிடந்த மின்சார வயர் அவரது சைக்கிளில் சிக்கியது. இதில் மின்சாரம் பாய்ந்து அவர் அதே இடத்தில் பலியானார்.

மேட்டூர் அணையில் 2 அடி உயர்வு

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கோடை மழை தீவிரம் அடைந்து உள்ளது. இதனால் மேட்டூர் அணைக்கு வரும் நீர் வரத்து கணிசமாக அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 108 அடியாக இருந்தது. இது நேற்று மாலை 4 மணி நிலவரப்படி 110.5 அடியாக உயர்ந்தது. அதாவது ஒரே நாளில் நீர்மட்டம் 2 அடி உயர்ந்தது.

மழையால் அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு 1300 கன அடியில் இருந்து 800 கன அடியாக குறைக்கப்பட்டது. தொடர்ந்து தண்ணீர் வரத்து இருந்தால் அணையின் உச்ச நீர்மட்டம் 120 அடியை விரைவில் எட்டும் என தெரிகிறது. இதனால் டெல்டா பாசனத்துக்காக ஜூன் 12–ந்தேதி மேட்டூர் அணை திறப்பதற்கான வாய்ப்பு ஏற்படும் என தெரிகிறது.

குமரியில் பரவலாக மழை

தமிழகத்தில் ஏற்பட்ட இயற்கை மாற்றத்தால் கோடை மழை நீடித்து வருகிறது. குமரி மாவட்ட தலைநகரான நாகர்கோவிலில் நேற்று மதியம் 1 மணியில் பெய்யத்தொடங்கிய மழை மாலை வரை தொடர்ந்து பெய்தது. இதனால் ரோடுகளில் மழை நீர் வெள்ளம் போல் ஓடியது.

இதேப்போன்று அஞ்சுகிராமம், மயிலாடி, கன்னியாகுமரி, ஆரல்வாய்மொழி பகுதிகளிலும் சாரல் மழை பெய்தது. மார்த்தாண்டம் மற்றும் தக்கலை பகுதியில் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

இந்த மழையால் மாவட்டத்தின் முக்கிய அணையான பேச்சிப்பாறை அணை உள்ளிட்ட அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. தற்போது 40.25 அடியாக அணையின் நீர் மட்டம் உள்ளது.

இந்த மழை கன்னிப்பூ சாகுபடியின் ஆரம்பக்கட்ட பணிகளை செய்ய விவசாயிகளுக்கு ஏதுவாக அமைந்து உள்ளது. இதனால் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

தினகரன்

## வாங்க ஆளில்லை குன்னூரில் ரூ.3.5 கோடி தேயிலை தேக்கம்

பதிவு செய்த நாள் 4/26/2011 2:45:35 AM



குன்னூர் : குன்னூர் தனியார் தேயிலை ஏல மையத்தில் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் ஏலம் நடைபெற்றது. இதில் மொத்தம் 13 லட்சத்து 74 ஆயிரம் கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 9.34 லட்சமும், டஸ்ட் ரகம் 4.40 லட்சமும் அடங்கும். இந்த ஏலத்தில் வெளிநாட்டு வர்த்தகர்களும், உள் நாட்டு வர்த்தகர்களும் குறைந்த அளவுக்கே கொள்முதல் செய்தனர். ரூ.3.5 கோடி மதிப்பிலான 39 சதவீதம் தேயிலைத்தூள் தேக்கமடைந்தது. அனைத்து ரக தேயிலைத் தூளுக்கும் ரூ.3 விலை சரிந்தது.

## குவிண்டாலுக்கு ரூ.9500 சரிவு ரூ.400 கோடி மஞ்சள் தேக்கம்

பதிவு செய்த நாள் 4/26/2011 2:43:57 AM



ஈரோடு : ஈரோடில் விலை சரிந்து வருவதால், மஞ்சளை பண்ணை வீடுகள் மற்றும் குடோன்களில் விவசாயிகள் இருப்பு வைக்க துவங்கியுள்ளனர். இதனால் ரூ.400 கோடி மஞ்சள் தேங்கியுள்ளது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு மார்ச், ஏப்ரலில் மஞ்சள் வரத்து அதிகரித்துள்ளது. அதிக வரத்தால், மஞ்சள் விலை வேகமாக சரிந்து வருகிறது. சீசன் துவக்கத்தில் குவிண்டால் மஞ்சள் அதிகபட்சமாக ரூ.17,500க்கு விலை போனது. தற்போது மார்க்கெட்டில் குவிண்டால் மஞ்சள் ரூ.9500 முதல் ரூ.9700 வரை குறைந்தது.

சீசன் துவங்கும் போது இருந்த விலையை காட்டிலும் தற்போது குவிண்டாலுக்கு ரூ.8 ஆயிரம் வரை விலை குறைந்துள்ளது. இதானல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பெரும்பாலான விவசாயிகள், மஞ்சளை வேக வைத்து பாலீஷ் செய்து பண்ணை வீடுகளிலும், குடோன்களிலும் இருப்பு வைக்க ஆரம்பித்துள்ளனர். வரும் ஆண்டில் மஞ்சள் சாகுபடி செய்ய 35 சதவீதம் மஞ்சளை, விதை மஞ்சளுக்காக தோட்டத்திலேயே விவசாயிகள் விட்டு வைத்துள்ளனர்.

ஈரோடு மாவட்ட வெளிமார்க்கெட் மஞ்சள் கிடங்கு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் ரவிசங்கர் கூறுகையில்,   நிஜமதாபாத், சாங்கிலி மற்றும் ஈரோடு மார்க்கெட்டுக்கு மஞ்சள் வரத்து அதிகமாக உள்ளதால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. ஈரோட்டில் மட்டும் 150க்கும் மேற்பட்ட வெளி மார்க்கெட் குடோன்கள் உள்ளன. இந்த குடோன்களில் சராசரியாக 2 ஆயிரம் மூட்டை (ஒரு மூட்டை 65 கிலோ) மஞ்சள் எனக் கணக்கிட்டால் கூட 3 லட்சம் மூட்டை மஞ்சள் இருப்பு வைக்க முடியும், என்றார். இதனால் சுமார் ளீ400 கோடி மதிப்புள்ள 40 ஆயிரம் மெட்ரிக் டன் (4 கோடி கிலோ) மஞ்சள் விற்கப்படாமல் உள்ளது..

விதை மஞ்சளுக்கு கிராக்கி

ஒரு ஏக்கருக்கு மஞ்சள் சாகுபடி செய்ய 1200 கிலோ விதை மஞ்சள் தேவை. அறுவடை முடிவில் ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் கிலோ மஞ்சள் கிடைக்க வாய்ப்புண்டு. ஒரு ஏக்கருக்கு ரூ.1.25 லட்சம் வரை சாகுபடி செலவாகும் என கணக்கிட்டால் குவிண்டாலுக்கு ரூ.10 ஆயிரம் என்ற விலை கிடைத்தால்கூட ரூ.2 லட்சம் முதல் ரூ.2.5 லட்சத்துக்கு மஞ்சளை விற்க முடியும். எப்படியும் ரூ.1 லட்சம் வரை லாபம் கிடைக்க வாய்ப்புண்டு என்பதால் இந்த ஆண்டிலும் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்றனர். தற்போது விதை மஞ்சளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ விதை மஞ்சள் ளீ50க்கு விற்கப்படுகிறது.

## முட்டை விலை 5 காசு உயர்வு

பதிவு செய்த நாள் 4/26/2011 2:43:40 AM



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டை விலை 215 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. கோழிப் பண்ணையாளர், வியாபாரிகள் ஆலோசனை நடத்தினர். அதில், முட்டை விலையில் 5 காசு உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 215 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு கிலோ முட்டைக்கோழி விலை ரூ.40 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி விலை ரூ.66 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது. தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை சற்று அதிகரித்துள்ளதால் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக கோழிப்பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.